# புருஷார்த்தப் பிரகரணம்.

இது

திருவண்ணாமலை ஈசானிய மடாலயம்

ஸ்ரீமது சி. சுப்பைய சுவாமிகளால்

இயற்றப்பட்டு,

வேலூர் வேதாந்த சபையாரால்

லோகோபகாரமாய்

வேலூர்

இலட்சுமி விலாச அ[redacted]

பதிப்பிக்கப்பட[redacted]

25—8—[redacted]921.[redacted]

புரவலர், கலைத்தி

திரு. ஆ. ராமசாமி பாண்டியர்

அவர்கள்

# அன்பளிப்பு

# ஸ்ரீ புருஷார்த்தப்பிரகரணம்

இது

திருவண்ணாமலை ஈசான்ய மடாலயம்

ஸ்ரீமது சி. சுப்பையசுவாமிகளால்

இயற்றப்பட்டு,

இராயவேலூர் வேதாந்த சபையாரால்

லோகோபகாரமாய்


வேலூர்

இலட்சுமி விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

25—8—1921.



ஸ்ரீ அருணாசல ஈஸ்வரர்.

# முகவுரை.

---

அன்புடையீர்! நம்புண்ணிய நாடான பரதகண்டம் சான்றோர் நிரம்பப்பெற்றுள்ளது. ஆதியிலுலகை இறைவருண்டாக்கி பிரவிருத்தி நிவிருத்தியென்ற இரண்டு மார்க்கங்களையும் உலகநிலைக்குக் காரணமாயுண்டாக்கினர். அம்மார்க்கங்கள்; கலியின்வன்மையாலும நாளுக்குநாள் அதிகரிக்கும் காமாதி துர்க்குணங்களாலும் மனிதர் விவேக மிழந்து வருதலினால் அழிந்துகொண்டே வருகின்றன. இந்த சமயத்தில் சிலநூற்கருத்தாக்களும் தமதுதமதுவாக்கேவேதவாக்கென்று சொல்லிக்கொண்டு பலமதங்களைக் காமபோக அனுபவசகாயமாயுமியற்றி நரருக்குச் சனாதன தருமந்தெரியவொட்டாமல் செய்கின்றனர். ஆகலின் அவ்வசுரமார்க்கங்கள் நீங்கி வேதாகம மார்க்கங்கள் ஓங்கி உலகை க்ஷேமப்படுத்த, திருவண்ணாமலை ஈசானியமடம் ஸ்ரீமத் சி. சுப்பைய சுவாமிகளை சுருக்கமாய் வருணாசிரம தருமங்களைச் சொல்லவேண்டுமென்று, இராயவேலூர் குயப்பேட்டைவேதாந்தசபையாரானநாங்கள் வேண்டியதற்கிணங்கி அப்பொருள் நிரம்பிய புருஷார்த்தப் பிரகரண மென்று வசனவடிவாய் முன்னோர்

னூல்வழி இந்தநூலைச்சுருக்கி யியற்றி யெமக்களித்தனர். இதில் வருணமும், ஆசிரமமும், அவரவர் செய்யவேண்டிய கருமமும், அதனால் வரும் பலனும், செய்யாவிட்டால் வருந்தோஷமும், ஒவ்வொருவருஞ் செய்யக்கூடாத காரியமும் கூறப்பட்டிருக்கிறது. இதன்படி ஒழுகுவதுதான் நமது கடமையாக யிருக்கின்றது. ஆகலின் அதனை யுணர இது சுருக்கமாயும் விளக்கமாயு மிருக்கின்றது. ஆகையாலிந்தநூலைவிட்டுவேறுநூலால் அப்பொருளை யுணரவே முடியாது. முடியாதாகவே தற்காலத்தயகுமார்க்கங்களில் சென்று துன்பமடைவோம். ஆகலின் அனைவரும் இம்மார்க்கமாய் பொருளாதி மூன்றையும்,ஞானத்தையடைந்து வீட்டையும் அடையும்பொருட்டு இதனை அச்சிட்டனம்.

இங்ஙனம்,

வேலூர் வேலப்பாடி

**ஐவுளி முருகேச முதலியார்**

சிவமயம்.

# புருஷார்த்தப்பிரகரணம்.

வருணமா சிரமந் தன்னால் வருமற முதலாய் நான்கும்
வருளுமா முகவன் றன்ன அடியிணை நினைந்து மேலா
மருணைமா நகரி லன்று வண்ணுருக் காட்டிப் போந்து
சரணமே சரண மென்றான் சிதம்பர வாரி யோனே.

வினா. புருஷார்த்தப் பிரகரணமென்பதுயாது?

விடை. புருஷர்களால் விரும்பப்படும் பொருளுக்குப் புருஷார்த்தம் எனப்பெயர்; அப்பொருளை விளங்கவுரைப்பதற்குப் பிரகரணமெனப்பெயர்; ஆகவே புருஷர்களால் விரும்பப்படும்பொருளை நன்றாய்ச்சுருக்கிக்கூறும்நூலுக்குப் புருஷார்த்தப்பிரக்ரணமெனப் பெயர்.

வினா. அந்த பொருள்யாது?

விடை. இன்பமும் இன்பசாதனமும்என்று இருவகையாகவிருக்கின்றன.

வினா. இவ்வின்பம் எத்தனைபிரிவு?

விடை. பலபிரிவுகளாக நூற்களிற் கூறப்பட்டிருப்பினும்சுருக்கமாய் சிற்றின்பமென்றும் பேரின்பம்(வீடு)என்றும் அதுஇரண்டுதான்.

வினா. இவற்றில்சிற்றின்பசாதனமென்பதுயாது?

விடை. அறமும் பொருளும் எனப்படுகின்றது; ஆகவே புருஷார்த்தமென்பது அறம், பொருள், இன்பம், வீடு என்று நான்காகச் சொல்லப்படுவனவாம்.

வினா. அறமென்பது யாது?

விடை. அந்தந்த வருணத்திற்கும், அந்த அந்த வாசிரமத்திற்கும் மனுஸ்மிருதி முதலிய நூற்களில்விதித்தவற்றைச் செய்தலினாலும்விலக்கியவற்றைச்செய்யாததினாலும் உண்டாகும்புண்ணியத்திற்கு அறமெனப் பெயர்.

வினா. அந்த வருணமும் ஆசிரமமும் எத்தனைப்பிரிவு?

விடை. பிராம்மண, க்ஷத்திரிய, வைசிய சூத்திரர் என்று வருணம் நான்கும்; பிரமசரிய, கிருகஸ்த, வானப்பிரஸ்த, சந்நியாசம் என்று ஆசிரமம் நான்குமாக விருக்கின்றன.

வினா. பிராம்மணரென்பவர் யார்?

விடை. கண்முதலிய ஞானேந்திரயங்களை விலக்கான விஷயங்களிற் செல்லவிடாதவரும், வருங்கால விஷபலாபாதிகளைக்குறித்துமனப் பூரிப்பை யடையாதவரும், சகுணம், நிர்க்குணம் அல்லது மூலாதாரமுதலிய ஆறு ஆதாரங்களில் ஒன்றில் மனதைநிறுத்துகின்றவரும, மண் தண்ணீர் இவற்றால் வெளிசுத்தியையும் ஆசையின்மையான உள்சுத்தியையும்செய்கின்றவரும், மனதின் சஞ்சலமின்மையினலாகும் சாந்திசுகத்தை யடைந்திருப்பவரும், நினைத்தவண்ணம் வெளியிற் சொல்பவரும், சொல்லியபடி செய்பவரும், வேதசாஸ்திரமுதலியவற்றைப்படித்து அவற்றின் பொருளை அநுபவித்தலான அநுபவஞான முடையவரும் ஆகியஇவர்கள் பிராம்மணராம்.

வினா. க்ஷத்திரியரென்பவர் யார்?

விடை. தமது கீர்த்தியெங்கும் விளங்கும்படிச்செய்பவரும், பொருளழிவினாலுண்டாகும் மனதின் சஞ்சலத்தைப் பொறுத்தலான தைரியமுடையவரும், விசேஷமாய்த் தானஞ்செய்பவரும், தெய்வவுபாசனையைச் செய்பவரும், பிரஜைகளை யடக்கி ஆளுபவரும், யுத்தத்திற் புறமுதுகிடாதிருப்பவரும்ஆகியஇவர்கள்க்ஷத்திரியர்.

வினா. வைசியரென்பவர் யார்?

விடை. பூமியையுழுது பயிர்த்தொழிற்செய்து அதனால் நெல்கோதுமை முதலிய வுணவுப்பொருள்களை விருத்திசெய்பவரும், பசுக்களை மேய்த்து அவற்றைப் பாதுகாப்பவரும், ஒருதீவிலுள்ள பண்டங்களை மற்றோர்தீவிற்குக் கொண்டுபோய் மாற்றுபவரும், அப்போது அந்நியர் பொருளைத்தம்பொருளைப்போல் நினைத்துவியாபாரஞ்செய்து, விலைமொழியைப் பொய்யாதவரும் ஆகியயிவர்கள் வைசியராம்.

வினா. சூத்திரரென்பவர் யார்?

விடை. எப்போதும் அந்நியர்வயப்பட்டுச் சுதந்திரமில்லாமல், தபசு,வீரம், அந்நியரையெதிர்பார்க்காமல் பொருள்வருவாய்க்குரிய கைத்தொழில் முதலியது யாதொன்றுஞ் செய்யத்தெரியாதவரும், அயலாரிட்ட கட்டளைப்படியே வேலைசெய்து அதனால்வரும் பொருளைக்கொண்டு உடம்பு வளர்ப்பவரும், சமுசாரத்திற் சதாதுக்கப்பட்டுச்சிறியபொருளைக்கொடுத்துப் பெரியபொருளை வாங்கிவிடமுயதுபவருமாகியஇவர்சூத்திரராம்.

வினா. இங்ஙனங் கூறியதற்குப் பிரமாணமென்ன?

விடை. ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவின் திருவாக்கான கீதையே மேலான பிரமாணமாம்.

வினா. பிரமசரியமென்பது யாது?

விடை. 16, 20, அல்லது 25 வயதுவரைக் குந்தமது குலகுருவினிடமிருந்துகொண்டு மேலாசிரமங்களைநடத்துமுறையை தருமபுத்திராதியர் போன்றுவேதசாஸ்திரமூலமாய்ப்படித்துக் கொண்டும், பிக்ஷையால் சரீரத்தை சம்ரக்ஷணை செய்துகொண்டும், மாதர்களைப் பிரியத்தோடு பார்த்தலான எட்டுவித மைதுனமில்லாமலும், மாதா, பிதா, குரு, தெய்வம், பெரியோர், தமையன்முதலியவர்களைப்பூஜித்தலுமாகியஇவற்றைச் செய்துகொண்டிருப்பது பிரமசரிய வாசிரமம்.

வினா. கிருகஸ்த வாசிரமமென்பது யாது?

விடை. முன்னாசிரமத்தைமுடித்தபின் தமது குருவே குலத்திற்குப் பொருத்தமான கன்னிகையத் தேர்ந்தெடுத்துப் பலர் அறியவுக்கினிசாக்ஷியாக விவாகத்தை முடித்துவைக்க, அப்போது தாம்பிதாவின் உரிமையையெல்லாங் கைக்கொண்டு வெடியற்காலஸ்நானம்இரண்டுவேளைக்குக்குறையாத சந்தியாவந்தனம் காயத்திரி பஞ்சாக்ஷர அஷ்டாக்ஷரமுதலிய செபம் மூர்த்தி தியானம் என்பவற்றைச்செய்து,மேலுங்கிருகஸ்தனுக்குண்டாகும்:ஐந்துவிதமான பாபமும்நசிக்கும்படி ஐந்துவிதமானயாகத்தையும் நித்தியகரு

மமாகச்செய்து பிறக்கும்போதே தம்மீதுள்ள மூன்றுகடனையும் தீர்க்க, புத்திரன் வேண்டுமென்ற எண்ணமிருந்தால் விதித்த தினங்களில் மனைவியோடு மந்திர உச்சாரணத்துடன் சேர்ந்து குழந்தை பிறக்கும்போது ஜாதகருமம், ஆறாவது மாசத்தில் அன்னமூண்பித்தலான அன்னப்பிராசனம், நாமகரணமுதலியவற்றைச்செய்து சிராத்தத்தையுஞ்செய்வது கிரகஸ்த ஆசிரமமாம்.

வினா. ஐந்துவிதமானயக்ஞமென்பதுயாது?

விடை. தேவயக்ஞம், பிரம்மயக்ஞம், பிதிர்யக்ஞம், பூதயக்ஞம், மனுஷியயக்ஞம் என்பனவாம். இவற்றில் தேவயக்ஞமென்பது; சிவ விஷ்ணுமுதலிய தேவதாவிக்ரகங்களுக்குச் சமயல்செய்த வன்னத்திற் சிறிதுஎடுத்துவைத்து நைவேதித்தலாம். பிரம்மயக்ஞமென்பது; அப்போது வேத பாராயணமேனும் அல்லது தேவாரதிருவாசக திருவாய்மொழிமுதலிய தேவதா சொரூபத்தைக்கூறும் அருட்பாடற்களையேனும்படித்தலாம். பிதிர்யக்ஞமென்பது; கொஞ்சம் அன்னத்தை யெடுத்து அத்தேவதைகளுக்குமுன்வைத்து இது எமது பிதிரர்களுக்குத் திருப்தியையுண்டாக்கக்கடவது என்பதுமுதலிய பிரார்த்தித்தலான மந்திரத்தோடு நீரிறைத்தலாம். பூதயக்ஞமென்பது; பிதிர்யக்ஞஞ்செய்தவன்னத்தைக் காக்கைக்குப்போட்டுவிட்டுக்காலலம்பி கொண்டு வீட்டிற்குள் வருதலாம். மனுஷியயக்ஞமென்பது; தாமஉணவையுண்ண வாரம்பிக்கும்போது தமது வீட்டிற்குப் பசியோடுவந்த அதிதிகளுக்கு அன்னம்

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,

போடலும், ஒருவரும் வாராதபக்ஷத்தில் அவர் பாகத்தைப் பசுவிற்கேனும் வைத்துவிடலாம்.

வினா. இவற்றை யேன்செய்யவேண்டும்? செய்யாவிட்டால் வருந்தோஷமென்ன?

விடை. அன்னத்தையுண்டாக்கும்பொருட்டு வயலையுழும்போதும், அம்மி திரிகிரி முதலிய யந்திரங்களைக் கொண்டு அரைக்கும்போதும், காய்கறிகளை யறுக்கும்போதும், விறகையெரிக்கும்போதும், நீரைக்காய்ச்சும்போதும் அநேகஜீவராசிகள் உயிர்விடுகின்றன; அதனாலுண்டாகும் பாவம் அவ்வன்னத்தைமுடி பாவவடிவமாக ஆக்கிவிடுகின்றது. அது பாவிகளின் கண்ணிற்கு உணவாகத்தோன்றினாலும் புண்ணியவான்களின் பார்வைக்குப் பாவமாகவே காணப்படுகின்றது. மேற்சொல்லிய ஐவகைவேள்விகளைச்செய்து மிஞ்சின வன்னமே அமிர்தமெனப்படுகின்றது. அவ்வமிர்தத்தையுண்போரே சர்வபாபங்களினின்றும்விடுபடுவார்கள். இவற்றைச்செய்யாதார் சூத்திரராகின்றனர். அவர்கள் பாபத்தையுண்கின்றனர். தேவர்கள் மழைவழியாகக்கொடுத்த வன்னத்தை அவர்களுக்கு ஆராதனைசெய்யாமலுண்போர் தேவசொத்தைத் திருடுந்திருடராகவு மாகின்றனர். பிரஜாபதி பிரஜைகளை யக்ஞத்தோடு உண்டாக்கி உங்களுக்கு இந்தயக்ஞம் இஷ்டத்தைக் கொடுக்கும் காமதேனுவாயிருக்கட்டும் என்றுகூறினார்; என்றார் ஸ்ரீகண்ணபிரான்.

வினா. உடன்பிறந்த மூன்று கடனாவது யாது?

அவற்றை யெங்ஙனந்தீர்ப்பது? இன்றேல் வருந்தோஷம் யாது?

விடை. தமதுகுலத்திற்குரிய நூற்களைப்பிரமசரியவொழுக்கத்திலிருந்து ஓதுதலினால் இருஷிகடனையும், இல்லற வாசிரமத்திலிருந்து ஒருபுத்திரனையுண்டாக்குதலினால் பிதிர்கடனையும், ஒருயாகத்தைச்செய்தலினால் தேவகடனையும் நீக்கவேண்டும். பிரமசரியவிருதத்தில் நூற்களைக்கற்காவிட்டால் மேலாசிரமங்களைநடத்து நீதிதெரியாமையால் அப்பொழுது பாபகாரியங்களைச்செய்துநரகமுதலியகஷ்டங்களை யடைவார்கள். ஒருபுத்திரனையுண்டாக்காவிடின் தமதுபிதிரர்கள், சோற்றுருண்டையோடு நீரிறைத்தலான பிண்டோதகக்கிரியை யின்மையால் பிதிர்லோகசுகத்தைவிட்டுக்கீழேவிழுந்துவிடுகின்றனர். யாகஞ்செய்யாவிடின் மழையில்லை, மழையில்லையாகவேசீவராசிகள் துன்பமடைவார்கள்; அஃதெங்ஙனமெனின் மந்திரத்தோடு அக்கினியிற்பெய்யப்பட்ட நெய்புகைவழியாக சூரியனையடைகின்றது, அதனாற்சூரியன் மேகவழியாகமழையை வரிஷிப்பான், அதனால் நெல்கோதுமைமுதலியஉணவுவிருத்தியாகும் அதினின்றும் வீரியவழியாய்ப்பிரசைகளுண்டாகும், அவரால் யாகமுண்டாகும்; முன்போல்சுற்றி வரும். இந்தமுறையால் இது இல்லையென்றால் உலகந்துன்பமடையும். இம்மாதிரி சக்கரம்போல் சுழன்றுவருவதால் இது உலகசக்கரமென்றும் சம்சாரசக்கரமென்றும் சொல்லப்படுகின்றது. இச்சக்கரத்தைப் பின்பற்றியநுஷ்டிக்

காக இல்லறத்தானில்லறத்தானன்று; அவன்உல
கை அழிக்கஅவதரித்தவன். அவன்பாவத்தையே
உணவுயென்று மயங்கிய மனதால் நினைத்துண்டு,
அப்பாவத்தாற் கீழ்கீழ் சென்மமுடையபுலி, பாம்
பு, தேள், முதலிய துஷ்டப்பிராணிகளாய்ப்பிறந்
து உலகத்தவர்களுக்குத் துன்பத்தைச் சென்ம
சென்மந்தோறு முண்டாக்குவன். சிராத்தத்தை
யும் அன்னசிராத்தமேச் செய்யவேண்டும். மனை
வியேனும் சமயற்காரனேனு மில்லாமல் தான்
அந்நியதேசம் போயிருக்குஞ்சமயத்தில் ஆமசி
ராத்தஞ்செய்யலாம். இவ்வாமசிராத்தத்தை
வாங்குபவநுக்கும் உயர்வுயில்லை. "மாதாவைக்
கொண்டாலும் ஆமத்தை ஒருபோதுங்கொள்ளக்
கூடாது" என்று விதித்திருக்கின்றது. மேலும்
பிதுரர்களுக்கு அன்னத்தினாலாகுந் திருத்தி அந்த
நக்ஷத்திரத்தில் அரிசியினாலாகாது.

வினா. வானப்பிரஸ்த ஆசிரமமென்பது யாது?

விடை. முன்னாசிரமத்தை நடத்தி ஜரை
நரை வருங்காலத்தில் மனைவியைப் பணிவிடைக்
குச் சீடனுகவைத்துக்கொண்டேனும் அல்லது
தனித்தேனும் வனத்திற் சென்று புல்லரிசி முத
லியவற்றைப்பொருக்கி உடலைவளர்த்துக்கொண்டு
தவஞ்செய்வது வானப்பிரஸ்தாசிரமமாம்.

வினா. சந்நியாச ஆசிரமமென்பது யாது?

விடை. தமக்குவிதித்த கருமத்தை விதிபூர்
வகமாய் விட்டுவிடுவதுசந்நியாசமாம். அதுமுன்
னாசிரமங்களைக் கிரமமாயனுஷ்டித்தேனும் அல்ல
து முதலாசிரமத்திலிருந்து நேராகவேனும் அடை

யப்படுகின்றது. அது அம்சமென்றும் பரமாம்சமென்றும் இரண்டுவிதமாம்; அவற்றில் அம்சம் பாலையும் நீரையும் வேறுபிரிக்கும் அன்னப்பறவைபோல் சாரமான பிரணவத்தைப்பற்றிக்கொண்டு குடீசகமென்றும், பஹூதகமென்றும் இரண்டு விதமாம்; அவை யாத்திரைக்குச் சக்தியில்லாதபோது கிராமத்தின் சமீபத்தில் குடிசையேற்படுத்தி அதில் வசித்துக்கொண்டு இருப்பதும்; சக்தியுள்ளபோது அநேகதீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்துகொண்டிருப்பதும் எனப்படுவன. பரமாம்சம்; ஆன்மதிருஷ்டியைப்பற்றிக்கொண்டு விவிதிஷையென்றும், வித்வத்தென்றும் இரண்டு விதமாம், அவை ஆன்மாவை அறியவேண்டுமென்னுமிச்சையால் சகலகருமங்களையும் விட்டுக் குருவையடைந்து சிரவண மனன நிதித்யாசனமான தமது நித்தியகருமத்தைச் செய்தலும், முன்னாசிரமங்களில்செய்த சிரவணத்தால் ஆன்மஞானமுதயமாய்விட்டால் தமது கருமானுசாரமான விருப்பத்தால் சித்தவிசிராந்தியின் பொருட்டுத் தாரபுத்திராதிகளைவிட்டு மலைக்குகை மரத்தடி பாழுங்கோயில் நதிதீர முதலிய இடங்களிலிருந்துகொண்டும் தத்வக்ஞான வாசனாக்ஷய மனோநாச அப்பியாசங்களைச் செய்துகொண்டும் பிறந்தமேனியோடேனும் கௌபீனதாரியாகவேனும் இன்னஜாதிஇன்னவாசிரமம் என்றொருவரால் அறிந்துகொள்ளும்படியான அடையாளமில்லாமல் வாசம்புரிதலும் எனப்படுவன. முன்னிருவருக்கும் சத்தியலோகத்தில்தான் ஞானம் வரும்; முத்தியும அங்குதான். பின்னிருவருக்

கும் ஞானத்தால் இகலோகத்திலேயே முக்தி யுண்டாகும்.

வினா. இங்ஙனங்கூறியதனால் யாதுண்டாயது?

விடை. மேற்கூறியவண்ணம் அவரவர்கருமங்களை வழுவாது பலனிலிச்சையுடையவராய் யனுஷ்டிப்பதினால் எந்தபுண்ணியமுண்டாகுமோ அதற்கே யறமெனப்பெயர். இதையுடையோரே புண்ணியரென்றும் பொருண்முதலியவற்றால் சர்வசுகத்தையும் அடைவரென்றும் கூறப்படுவார்.

வினா. விலக்கப்பட்டுள்ள கருமமென்பதியாது?

விடை. கள்ளுண்டல், சாராயங்குடித்தல், கஞ்சாபிடித்தல், அபினிதின்றல், சூதாடல், பரஸ்திரிகளை விரும்புதல், மாமிசமுண்ணுதல், கள்கடைமுதலியவற்றைக் குத்தகைவிடல், குத்தகையெடுத்தல்அவற்றையெடுப்போருக்குப்பொருண்முதலியவற்றால் உபகரிததல்,கள்மரகுத்தகைவிடல் குடித்தவனைப் பார்த்துக்களித்தல், குடிக்க பொருள் கொடுத்தல், குடித்தவனைத் தீண்டுதல், முதலிய செய்கைகளே விலக்கப்பட்ட கருமங்களாம. அவற்றைச்செய்தலினாலாகும அதிருஷ்டத்திற்கேபாபமெனப்பெயர் அவற்றையுடையோர் பாபிகளாம்; அவர்களுக்குத்தான்ரௌரவாதி நரகங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. இங்ஙனம் விதித்தனச்செய்தலும் விலக்கியனசெய்யாதொழிதலுமே யறமெனப்பட்டது.

வினா. பொருளென்பது யாது?

விடை. புண்ணியத்தைச்சம்பாதிக்கக்காரண மாயும் இன்பத்தையனுபவிக்க யேதுவாயும்முன் செய்த புண்ணியத்தா லுண்டாவதாயுமுள்ளபொன், மணி, கல்வி முதலானவைகள் பொருளாம்.

வினா. அப்பொருள்எத்தனைப்பிரிவு?

விடை. அவைபலவகைப்படினும்கல்வி, செல்வம் எனஇருவகையாகச்சொல்லப்படுகின்றன. இதில் கல்விப்பொருளுயர்ந்தது. இப்பொருளையுடைமையினாலேயே அநேகரிகமேனாட்டார் சுகிகளாயிருக்கின்றனர். நாம் அதனை அனாதரவுசெய்தமையாலசுகிகளானோம். அதிலும் நமது சொந்தகல்விப்பொருளைவிட்டு அந்நியநாட்டாருடையகல்விப்பொருளில்ஆசைவைத்தவர்கள், பொருளொன்றையே விரும்பும் பொதுமகளிரிட மன்புவைத்து தமது கைப்பொருளைமுழுதுங்கொடுத்தபின் அவற்றை அவர் பற்றிக்கொண்டு இவனை விட்டு அயலானை விரும்பிச்செல்லும்போது உண்டாகுந் துயரையடைவதுபோல் அக்கல்விநீங்கும்போது துயரமடைவர். ஆகலின் நமதுகல்வி உயர்ந்தது.

வினா. அச்செல்வப்பொருளைச் சம்பாதிக்கும் பிரத்தியக்ஷமார்க்கம் யாது? அது எத்தனை?

விடை. பூமியையுழுதல், சேவகஞ்செய்தல், கணக்குஎழுதுதல், வியாபாரஞ்செய்தல், சிற்பமெழுதுதல், வித்தையைக் கற்பித்தலெனப்படும் அறுவிததொழிலால் சிநேகிதருக்கும், பந்துகளுக்கும், பெரியோர்களுக்கும், பிரியமுண்டாகும்படி சரியானவழியில் சம்பாதிப்பதுதான் பிரத்

தியக்ஷவழியாம். இப்படிசம்பாதித்ததே பொருளாகும். விலக்கான வழிகளிலுண்டாவதெல்லாம் பொருளல்ல. அதுவும் பொருளாககாணப்படினும் வைக்கோல்தீ பெருகுவதைப்போல்காணப்பட்டு உடனே அழிந்துவிடுவது போல் அழிந்துவிடும். இவ்விரண்டும் புறப்பொருளாம். அகப்பொருளென்பது இன்பமாம்.

வினா. இன்பமென்பது யாது?

விடை. இன்பமென்பது காமமென்பதுதான், அது ஒருபொருளில் சுவை (இரசம்) ஒளி (உருவம்) ஊறு (பரிசம்) ஓசை (சத்தம்) நாற்றம் (கந்தம்) என்னும்ஐந்துவிஷயங்களையும் நாக்கு (சிங்குவை) கண் (சக்ஷு) தோல் (துவக்கு) காது (சுரோத்திரம்) மூக்கு (ஆக்கிராணம்) என்னும் ஐந்து இந்திரியங்களாலும் அனுபவிக்கும் இன்பமாம்.

வினா. இவ்வின்பமெத்தனைப் பிரிவு?

விடை. இது கலந்தனுபவித்தலென்றும், பிரிந்தனுபவித்தலென்றும் இரண்டுபிரிவு.

வினா. கலந்தனுபவித்தலாவது யாது?

விடை. பிணி மூப்புகளில்லாமல் என்றும் ஒருதன்மையராய்அழகு, செல்வம், குலம், குணம், அன்புமுதலானவைகளால் சமானமான தலைவனும் தலைவியும் கொடுப்பாரும் கொள்வாருமில்லாமல் ஊழ்வினையால் தாங்களே எதிர்ப்பட்டு புணர்ந்து வாழ்ந்து வருவதாம்.

வினா. பிரிந்தனுபவித்தலாவது யாது?

விடை. மணஞ்செய்துகொண்டபின் தலைவன் கல்விப்பொருள் செல்வப்பொருள் முதலியவற்றைச்சம்பாதிக்கத்தூரதேசம்போயிருக்கும் போதும் சமீபதேசம்வந்திருக்கும்போதும், பிரிந்திருக்கச் சகிக்காதவர்களாய் அனுபவிக்கு மின்பமாம். இதுவும் நான்குபிரிவு. அவற்றைக்காமநூற்களிற்காணவேண்டும். அறத்தின்வழியே இல்லறத்தை நடத்தும்போது பிதிர்கருமத்தால் உண்டாகும் பிதிர்லோகசுகமும், தேவதாவுபாசனையாலுண்டாகும்பிரம்மலோகசுகமும், ஐவகையாகத்தாலுண்டாகும்இந்திராதிஉலகசுகமும்இன்பமென்று சொல்லப்படும். இதில் இருவரும் ஒத்தமனமுடையவராயனுபவிப்பது ஒருதலைக் காமமென்றும், அப்படி இல்லாமலனுபவிப்பது இருதலையினபமெனறுஞ் சொல்லப்படும்

வினா வீடுயென்பது யாது?

விடை. சர்வதுக்கமுமில்லாமல் சர்வாநந்தமாய்எவ்வுலகிலும் எவ்வுடம்பின்தோற்றமுமில்லாமல் பசுகரணங்கெட்டுப் [illegible]மாத்திரம் நிற்பவ பரமோக்ஷமெனப்படும்வீடாம்.

வினா. இந்தமோக்ஷத்தின் சாதனமயாது?

விடை. வஸ்து எப்படியுள்ளதோ அப்படி உணரும் ஞானமொன்றேசாதனமாம். இந்தஞானம்; முன்னுசிரமங்களை நன்றாகச்செய்து அவற்றின்பலனை இகலோக பரலோக போகங்களை விரும்பாமல் பரமேசுவரனுக்கு அந்தபுண்ணியத்தை அர்ப்பணஞ்செய்து வரும்போது ஆசையறலான மனத்தூய்மையுண்டாய் அதனாற்பிறப

புத்துன்பமென்றும் வீடு இன்பமென்றுந்தோன்றி சற்குருவைச்சரணமடைந்து, உபதேசமபெற்று விவேகம், வைராக்கியம், சட்சம்பத்தி, முமூக்ஷுத்துவம், சிரவண, மனன, நிதித்தியாசனம், தத்துவம்பதார்த்தசோதனம்என்னும் எட்டு அங்கங்களையும் அனுஷ்டித்துவருதலால் யாதொருதடையுமில்லாத அபரோக்ஷமெனப்படுவதாய் உதயமாகும்.

வினா. விவேகமென்பது யாது?

விடை. பாலையும் நீரையும் வேறுபிரிக்கும் அன்னப்பறவைபோல் நித்தியமானது ஆன்மாவொன்றேதான்; அதற்கன்னியமான நாமரூபாதியுலகனைத்தும் பழுதைபபாம்பைப்போல் அநித்தியமானது என்று மனதால் வேறுபிரித்து அறிதலுக்கு, நித்தியாநித்தியவஸ்துவிவேகமெனப் பெயர்.

வினா. வைராக்கியமென்பது யாது?

விடை. [redacted]லாக பரலோக சுகசாதனமான ஸ்திரிமுதலான விஷயங்களைத்தோல், மயிர், நரம்பு, கொழுப்பு, மாமிசம், மலம், மூத்திரம், சீழ், இரத்தம், மூளை, கண்ணீர், புண்ணீர், பூளை, எலும்பு என்பதுமுதலாக விவேகத்தால் வேறுபிரித்தபின் அதில் ஆசைவாராமல் நாய்கக்கின அன்னத்தைப்போலும் பன்றிவிஷ்டையைப்போலும் காக்கை மலத்தைப்போலும்நினைத்து புத்திரன் தனமுதலிய விஷயங்களிலும் ஆசையில்லாமலிருப்பது இகாமுத்திரார்த்தபலபோகவிராகமாம்.

வினா. சட்சம்பத்தி யென்பது யாது?

விடை. சமம், தமம், விடல், சகித்தல், சமாதானம், சிரத்தைஎன்னுமிவ்வாறின்கூட்டமாம்; இவற்றில்சமம்,மனதைஅடக்கல். தமம், இந்திரியததையடக்கல். விடல், விஷயத்தைவிட்டொழிதல். சகித்தல், சீதஉஷ்ணமுதலியஇருமைகளைப்பொறுத்தல். சமாதானம், மனதைசகுணம் அல்லது நிர்க்குணமுதலியசொரூபத்தில் நிறுத்துதல். சிரத்தை, குருசாஸ்திரங்களில் மேலான விசுவாசம். இவ்விசுவாசமே யுயர்வானசாதனம்.

வினா. முமுக்ஷுத்துவம் என்பது யாது?

விடை. தலைரோமததில் தீப்பற்றிக்கொண்டவன் எங்ஙனம் தண்ணீரைத்தேடுவானோ அங்ஙனம் மோக்ஷமாத்திரத்தையடையவேண்டுமென்ற தீவரமான இச்சையாம்.

வினா. சிரவணமென்பது யாது?

விடை வேதாந்தங்களான உபநிஷதங்களுக்கு அத்வைத பிரம்மத்தைமாத்திரம் பிரதிபாதிக்குந் தாத்பர்யமுண்டென்று ஆறுலிங்கங்களால் செய்யப்படும் ஆராய்ச்சியாம்.

வினா. மனனமென்பது யாது?

விடை. சிரவணஞ்செய்தபொருளினுள்ள சந்தேகநீங்கும்படிச் செய்யும்பேதத்தைப்பாதிப்பதும் அபேதத்தைச்சாதிப்பதுமாகிய யுத்தியாம்.

வினா. நிதித்தியாசனமென்பது யாது?

விடை. அனாதமாகார எண்ணங்களை நீக்கி ஆத்மாகாரமான எண்ணத்தைத்தைலதாரையைப்போல் புருஷபிரயத்தனத்தால் பழகுவது.

வினா. தத்துவம்பதார்த்தசோதனையென்பது யாது?

விடை. ஈசனைக்குறிக்கும் தத் என்ற பதத்தின் பொருளான சைதன்னியத்தையும், சீவனைக்குறிக்கும் துவம் என்ற பதத்தின் பொருளான சைதன்னியத்தையும், ஐக்கியத்தைக்குறிக்கும் அஸி என்ற பதத்தின்பொருளான ஒன்றுந்தன்மையாக வுணர்வது. இதுதான் அகண்டாகாரமான ஆன்மஞானம். இந்தஞானத்தால் தன்னையுந்தலைவனையு மலத்தையு மறைத்திருந்த மூலாஞ்ஞானம் அழிவையடையும்; அப்போது சசாதியவிசாதிய சுவகதபேதமின்றிய சச்சிதானந்த சிவம் வெளிப்படும். அதுவே அனர்த்தநிவர்த்தி ஆனந்தபிராப்தியாகிறமோக்ஷமாம். இம்மார்க்கத்தினைவிட்டு நிமிஷத்தில் ஞானத்தையுண்டாக்குவேனென்று உலகத்தில் ஒருவன்சொன்னால் அதைப்பேரியோர் வாக்காய்க் கொள்ளக்கூடாது இங்ஙனம் புருஷர்களால் விரும்பப்படும் அறமுதலியநான்கும் சாதனசாத்தியங்களோடு அனைவரும்வழி அறியச் சுருக்கிக்கூறப்பட்டன.

புருஷார்த்தப் பிரகரண முற்றிற்று.

தேசிகர் தன்னை யுண்ணத் தேர்ந்திடு மெண்கி னுவித்
தூசெனச் செய்த சூதத் தருவடிக் கரியின் ருளால்
மாசில வறமே முன்னு மகத்துவ வீடு நான்கு
மேசில தடைந்து வாழ வியற்றினன் சுருக்க மாயே.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்